சுருக்கம்

வீட்டுவசதி – தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் – விற்பனை செய்யப்படாத அலகுகளுக்கு விலை நிர்ணயம் செய்ய மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

==========================================================

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி(வீ.வ.4(2)த்துறை

அரசாணை (நிலை) எண்.287

நாள்: 09-12-2010

படிக்கப்பட்டது:

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடமிருந்து பெறப்பட்ட கடிதம் எண்.ஒ.து.1.10/10206/ 2005–1, நாள் 9.11.2010.

ஆணை:-

பார்வையில் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநரின் கடிதத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் உள்ள விற்பனை செய்யப்படாத அலகுகளை விற்பனை செய்வதற்கான அனுகூலங்களை ஆராய்வதற்கு ஒவ்வொரு மாட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு கீழ்க்காணும் உறுப்பினர்களை கொண்டு அமைப்பதற்கு பின்வரும் அமைப்புடன் குழு அமைக்க ஆணைக் கோரியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1) | சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் | தலைவர்<br>(சென்னை மாவட்டத்திற்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநரையே குழுவின் தலைவராக நியமிக்கலாம்.) |
| 2) | தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் | குழு நடத்துனர்<br>தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அலுவலகம் |
| 3) | மாவட்ட வருவாய் அலுவலர் | |
| 4) | சம்மந்தப்பட்ட வீட்டுவசதி வாரிய கணக்கு அலுவலர் / கோட்ட கணக்காளர் | |

2. மேற்சொன்ன மாவட்டக் குழுவிற்கு கீழ்கண்டவாறு செயல்படுமாறு பணிக்கலாம் என்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

1) சம்மந்தப்பட்ட கோட்ட செயற்பொறியாளர் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் உள்ள விற்பனை செய்யப்படாத அலகுகளை குறித்து சந்தை விலையை விட நடப்பு விலை அதிகம் என்பதால் அதன் அருகே உள்ள உள்கட்டமைப்பு வசதிகள் போன்ற விவரங்களுடன் அவ்வலகுகள் அத்தகைய விலை மதிப்புடையதா அல்லது அவ்வாறு இல்லையா என்பதை குறித்து அக்கட்டடங்களின் புகைப்படங்களுடன் மேற்காணும் குழுவிற்கு விவர அறிக்கை அளிக்க வேண்டும்.

த.பி.பா.

2) மேற்குறிப்பிட்ட குழு, விற்பனை செய்யப்படாத அலகுகளுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலை நியாயமானதா இல்லையா என ஆய்வு செய்து இறுதி விலை நிர்ணயம் செய்யும் பொருட்டு ஓர் அறிக்கையை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு அனுப்பவேண்டும். இக்குழு மேற்குறிப்பிட்ட பொருள் மீது தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய கோட்டம் / அலகிலிருந்து விற்பனையாகாத வீட்டுவசதி அலகுகள் குறித்த விவரங்களைப் பெற்றுக் கொண்டதிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தன்னுடைய அறிக்கையை வாரியத்திற்கு அனுப்ப வேண்டும்.

3) மாவட்டக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் விற்பனை செய்யப்படாமல் உள்ள அலகுகளுக்கு நியாயமான விற்பனை விலையை நிர்ணயிக்க வேண்டும்.

4) விற்பனை செய்யப்படாமல் உள்ள அலகுகளுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் நிர்ணயிக்கப்படும் தகுந்த விலை குறித்த முடிவு அறிக்கைகளின் அடிப்படையில் மட்டுமல்லாமல் தன்னிச்சையாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

3. இதனை அரசு நன்கு ஆய்வு செய்து, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் கோரிக்கையினை ஏற்று அவர் கோரியவாரே மேலே பத்தி 1-ல் சுட்டியவாறு ஒவ்வொரு மாவட்டத்திலும் விலை நிர்ணயக் குழு அமைத்து அம்மாவட்டக் குழுக்கள் மேலே பத்தி 2-ல் சொல்லியுள்ளவாறு செயல்படும் என்றும் அரசு ஆணை வெளியிடுகிறது.

4. இவற்றுடன் விற்பனை செய்யப்படாத அலகுகள் குறித்தோ நிலத்தொடர்பாகவோ ஏதேனும் பொதுப் பொருள் இருப்பினும் அதனை வாரியம் இக்குழுவிற்கு அறிக்கைக்காக அனுப்பலாம் என்றும் அரசு ஆணையிடுகிறது.

5. இந்தக்குழு விரைவில் கூடி, எடுத்த நடவடிக்கைகள் பற்றி விரிவான அறிக்கையை அரசுக்கு அனுப்ப வேண்டுமென தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநருக்கு அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அஷோக் டோங்ரே,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை-600 035.
அனைத்து மாவட்ட ஆட்சியர்
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
அமைச்சர் (வருவாய் மற்றும் வீட்டு வசதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசுச் செயலரின் தனிச் செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை-9.
இகோ/ உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 13/12/11